முக்கிய வார்த்தைகள்:
நோக்கம்
முன்னுரிமை
பொருள்

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**19 டிசம்பர் 2025 / 28 ஜமாதில் ஆகிர் ஹிஜிரி 1447**

# வாழ்க்கையின் நோக்கமும் முன்னுரிமை கொடுக்க வேண்டிய விஷயங்களும்

الحَمْدُ لِلَّهِ الَّذِي خَلَقَ الإِنْسَانَ فِي أَحْسَنِ تَقْوِيمٍ، وَأَمَرَنَا بِالتَّقْوَى وَالخُلُقِ الكَرِيمِ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللَّهِ، اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ، وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது உண்மையான உணர்வுடன் ”தக்வா” [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக! “தக்வா” என்றால் அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பதும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதும் ஆகும். நமது நோக்கங்களை அமைப்பது, நாம் தேர்ந்தெடுக்கும் விஷயங்கள், நமது வாழ்க்கையைச் செயல்படுத்துவது ஆகிய அனைத்திலும் ”தக்வா” காணப்படுவது அவசியமாகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது உள்ளங்களுக்கு அமைதியையும், ஈமானின் பாதையில் நிலைத்து நிற்கும் ஆற்றலையும் வழங்கி, அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

சில சிந்தனைகளை உங்கள் முன் வைத்து, இன்றைய "குத்பா" பிரசங்கத்தை ஆரம்பிக்கலாம் என நினைக்கின்றேன். நமது இந்த வாழ்க்கையில் நாம் உண்மையிலேயே **முன்னுரிமை** கொடுக்க வேண்டிய விஷயங்கள் யாவை? நாம் நமது வாழ்வாதாரத்தையும் கல்வியையும் தேடுவதற்காக ஓய்வில்லாமல் உழைக்கின்றோம்; நமது குடும்பத்தார் களைக் கவனித்துக் கொள்கிறோம்; இறுதியாக, நமது இறைவனின் பால் நாம் திரும்புவதற்கு முன்பாக மகிழ்ச்சியாக இருக்க விரும்புகிறோம். இவைதான், மனித வாழ்க்கையின் உண்மையானப் **பொருளா?** அதன் **நோக்கமா?**

உண்மையில், நம்மில் பலர் ஓய்வில்லாமல் அலுவல்மிக்கவர்களாக வாழ்ந்து வருகிறோம்; அதன் காரணமாக, நம்மில் பலர், தமது வாழ்க்கைப் பயணத்தின் **நோக்கமென்ன**? எந்தத் திசையை நோக்கி நாம் பயணிக்க வேண்டும்? என்ற விஷயத்தில் தெளிவான விளக்கமில்லாதவர்களாக இருக்கலாம். ஒரு பொறுப்பிலிருந்து மற்றொரு பொறுப்பை நிறைவேற்றுவதன் பால் விரைந்து செல்கிறோம்; *இம்முயற்சிகளெல்லாம் நம்மை எதன் பால் அழைத்துச் செல்கின்றன?* எனச் சிந்திப்பதற்கு மிக அரிதாகவே நமக்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

மனிதர்கள் **நோக்கமின்றி** படைக்கப்படவில்லை என அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு நினைவூட்டுகிறான். திருக்குர்ஆனின் "அல்-முஃமினூன்" எனும் அத்தியாயத்தின் 115-வது வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَٰكُمْ عَبَثًا وَأَنَّكُمْ إِلَيْنَا لَا تُرْجَعُونَ ١١٥

பொருள்: நாம் உங்களைப் படைத்ததெல்லாம் **[நோக்கமின்றி]** வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் நினைத்துக் கொண்டீர்களா?

தற்போது ஓதப்பட்ட வசனமாகிறது, முஸ்லிமின் ஒவ்வொரு செயலும் முயற்சியும் **பொருள்மிக்கதாக** இருப்பது அவசியம் எனச் சுட்டிக் காட்டுகிறது. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கை, **நோக்கத்துடன்** கூடியதாக உள்ளது எனவும், அவனது ஒவ்வொரு செயலும் பொறுப்புமிக்கதாக உள்ளது, அதற்குப் பதில் சொல்வது அவசியம் எனவும் உறுதியாகக் கூறுகிறது.

நமது தற்காலத்தில், நமது வாழ்க்கைத் தேட்டங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக, ஒரு பணியை முடித்த பின், முடிவில்லாமல் மற்றொரு பணி செய்வதில் ஈடுபட்டு விடுகிறோம். நமது வாழ்க்கையானது, அதன் **நோக்கத்தை** அடைவதை விட, அதன் **தேட்டங்களை** நிறைவேற்றுவதில் கழிந்து விடுகிறது என்பதை நாம் அறியாதவர்களாக இருக்கின்றோம்.

வாழ்க்கைத் தேட்டங்கள் நம்மை மிகைத்து விடும் போது, நாம் **முன்னுரிமை** கொடுக்க வேண்டிய விஷயங்கள் தெளிவில்லாமல் மங்கலாகி விடுகின்றன. உண்மையாகத் தேவைப்படும் விஷயங்கள் தள்ளிப் போடப்படுகின்றன; **பொருள்மிக்க** விஷயங்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகின்றன; இறுதியில், நமது வாழ்க்கையின் உண்மையான **நோக்கமென்ன**, எவ்விஷயத்துக்கு **முன்னுரிமை** கொடுக்க வேண்டும் என்பதை அறியும் ஆற்றலை நாம் இழந்து விடுகிறோம்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே**!

கவனமுள்ள முஸ்லிம்கள் தமது வாழ்க்கையின் **நோக்கத்தைத்** தெளிவாக அறிந்திருப்பார்கள். அவர்கள் தமது வாழ்க்கைப் பயணத்தில், மன அழுத்தங்கள், ஓய்வில்லாத அலுவல்மிக்க நிலை, தமது அன்றாடப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றுக்கு இடமளிக்க மாட்டார்கள். மாறாக, வாழ்க்கையில் எவற்றுக்கு **முன்னுரிமை** கொடுக்க வேண்டும்; தமது ஒவ்வொரு முயற்சிகளின் **நோக்கமென்ன** என்பவற்றைத் தெளிவாக அறிந்து, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் வகையில் தமது வாழ்க்கை முழுவதையும் அமைத்துக் கொள்வார்கள்.

நமது வாழ்க்கையின் **நோக்கமென்ன,** வாழ்க்கையில் எவற்றுக்கு **முன்னுரிமை** கொடுக்க வேண்டும் என்பது சம்பந்தமாக, இன்றைய "குத்பா" பிரசங்கம் மூன்று கருத்துக்களை உங்களுக்கு வழங்க உள்ளது:

**முதலாவதாக: நோக்கத்துடன் வாழ்வதானது, ஒருவரின் தரத்தை உயர்த்தக் கூடியதாகும்**

வாழ்க்கையின் **நோக்கத்தைத்** தெளிவாக அறிந்துள்ள ஒரு ஓரிறை நம்பிக்கையாளர், தனது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் கவனமாகச் செயல்படுபவராக இருப்பார். அவர் நம்பத்தக்க தொழிலாளியாகவும், கல்வியைத் தேடுவதில் ஆர்வமிக்கவராகவும், சமூகத்துடன் பழகுவதில் மகிழ்ச்சியானவராகவும் இருப்பார். அவர், தான் ஏற்கும் ஒவ்வொரு பொறுப்பும், செயல்படுத்துகின்ற ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் அமானிதமாகும் என்பதை அறிந்தவராகவும் இருப்பார்.

வாழ்க்கையில் தெளிவான **நோக்கத்தைப்** பெற்றிருப்பதானது, நமது உட்புற ஒழுக்கத்தை வடிவமைப்பதாக இருக்கும். அந்த ஒழுக்கம், அவரது இலகுவான மற்றும் கஷ்டமான காலங்களில் அவரது செயல்களுக்கு வழிகாட்டுவதாக அமையும்.

நமது **நோக்கம்** தெளிவாக இருந்தால், அது நமது நடத்தையையும், தொழிலையும், வணக்க வழிபாடுகளையும், நேர்மறையானவையாகவும் ஆக்கப்பூர்வமானவையாகவும் ஆக்கும். அந்நிலையில், நமது பணிகளை நாம் கவனமில்லாமல் செய்யமாட்டோம்; வணக்க வழிபாடுகளை அவசரமாக நிறைவேற்ற மாட்டோம். ஒவ்வொரு செயலும், வெறும் அதன் உலக விளைவுகளால் அளவிடப்படுவதில்லை; மாறாக, அல்லாஹ்வின் பார்வையில் அதன் மதிப்பு என்ன என்பதைப் பொருத்தே அதன் தரம் அளவிடப்படுகிறது.

**இரண்டாவதாக: உலக விஷயங்களையும் ஆன்மீக விஷயங்களையும் சமநிலையாகச் செயல்படுத்த வேண்டும்; இரண்டையும் பிரிப்பது கூடாது.**

நாம் முஸ்லிம்கள் எனும் ரீதியில் கவனமாக இருக்க வேண்டும்; நமது உள்ளங்களை, உலக விவகாரங்கள் முழுமையாக தம் பக்கம் கவர்ந்து விடுவதற்கு அனுமதித்து விடக் கூடாது. அதே சமயம், உலகப் பொறுப்புகளை முழுமையாகப் புறக்கணித்து விட வேண்டுமென இஸ்லாம் நமக்கு வழிகாட்டவில்லை. மாறாக, நமது இறுதி நோக்கத்தை அடைவதற்கான **வழியாக** உலகத்தைக் காண வேண்டுமே தவிர, உலகத்தையே இறுதி நோக்கமாக அமைத்துக் கொள்ளக் கூடாது என இஸ்லாம் கூறுகிறது.

நினைவில் கொள்ளுங்கள்! உலக வாழ்க்கை நமது இறுதிக் குறிக்கோளாக அமைந்து விடுமென்றால், அது பெரும்பாலும் ஏமாற்றத்தைத் தருவதாக இருக்கும். மாறாக, நமது இறுதி நோக்கத்தை அடைவதற்கான வழியாக உலகத்தைப் பயன்படுத்தப்பட்டால், அது அல்லாஹ்வின் வெகுமதியும் அவனது அருள்களும் நமக்குக் கிடைப்பதற்குக் காரணமாகி விடும்.

உதாரணமாக, நமது வருங்காலத்தைச் சீராக அமைப்பதற்காக கல்வியைக் கற்கின்றோம்; நமது குடும்பத்தார்களுக்கு உதவுவதற்காக நாம் வேலை செய்கிறோம்; நலமான, நிலையான வாழ்க்கையை அடைவதற்காக நாம் திட்டமிடுகிறோம். இவையனைத்தையும் அல்லாஹ்வின் பக்கம் நம்மை நெருக்கமாக்கிக் கொள்ள வேண்டும்; அவனை விட்டும் விலகி விடக் கூடாது எனும் நோக்கத்தில் செய்யப்பட்டால், இவையனைத்தும் வணக்க வழிபாடாக அமைந்து விடும். அவற்றுக்கு நன்மையுண்டு.

நாம் நமது அன்றாடத் தொழுகைகளில் பிரகடனம் செய்து, ஓதுகின்ற பின்வரும் பிரார்த்தனையில் சிந்தனை செய்வோமாக!:

إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

பொருள்: "நிச்சயமாக, என்னுடைய தொழுகை, என்னுடைய வணக்க வழிபாடுகள், என்னுடைய வாழ்வு, என்னுடைய மரணம் ஆகிய அனைத்தும் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும்"

இந்த உணர்வுடன், நம்மிடம் காணப்படும் செல்வம், உடல் நலம் மற்றும் திறமைகள் ஆகிய அருட்கொடைகளுக்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டுமென ஆர்வமூட்டப்பட்டுள்ளோம். இந்த அருட்கொடை களை நாம் கவனத்துடனும், பொறுப்புணர்வுடனும் அறிவுப்பூர்வமாகவும் பயன்படுத்த வேண்டுமெனவும் நினைவூட்டப்பட்டுள்ளோம்.

**மூன்றாவதாக: முன்னுரிமை கொடுக்க வேண்டிய விஷயங்களை அறிவதும், அருளப்பட்டுள்ள அருட்கொடைகளுக்காக நன்றி செலுத்துவதும்**

சன்மார்க்கத்தைச் செயல்படுத்துதல், நமது குடும்பத்தாரின் நலன், நமது வாழ்வாதாரம், தரமான வாழ்க்கை ஆகிய நமது வாழ்க்கையில் நாம் **முன்னுரிமை** கொடுக்க வேண்டிய ஒவ்வொரு விஷயமும் தனித்து நிற்பவை அல்ல; மாறாக, அவற்றில் ஒவ்வொன்றும் மற்ற விஷயங்களைச் சார்ந்துள்ளன; உதாரணமாக, நிலையான சுற்றுப் புறச்சூழ்நிலை, மரியாதையான சமூகத் தொடர்புகள், நாம் அமைதியாக வாழ்வதற்கும் தொழில் செய்வதற்கும் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் தேவையானச் சூழ்நிலைகள் ஆகியவற்றைச் சார்ந்துள்ளன.

மேற்கூறப்பட்ட விஷயங்களை, நாம் நீண்ட காலமாக அனுபவித்து வருவதால், அவை நமக்கு முக்கியமானவையாகத் தென்படாம லிருக்கலாம். எனினும், இந்த அமைதியான நிலையைப் பாதுகாப்பதன் அவசியத்தை நாம் சாதாரணமானதாகக் கருதி விடக் கூடாது. இது போன்ற அருட்கொடைகளையும் அமைதியான நிலையையும் நாம் இழக்கும் போது தான், அவற்றின் அருமை நமக்குப் புரிய வரும்.

**அன்பும் அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

ஆண்டின் இந்த இறுதிப் பகுதியானது, நமது **முன்னுரிமைகளையும்**, நமது வாழ்க்கைப் பயணத்தையும் நாம் மறுசீரமைப்பு செய்வதற்கான வாய்ப்பை நமக்கு வழங்குகிறது. மன அழுத்தங்கள் மற்றும் ஓய்வில்லாத, அலுவல்மிக்க நிலைகள் ஆகியவை, நமது வாழ்க்கைத் திசையை மாற்றி அமைப்பதற்கு அனுமதித்து விடாதீர்கள்; நமது "ஈமான்" நமக்கு வழிகாட்டட்டுமாக! அல்லாஹ்வின் திருப்தி நமது இறுதி இலக்காக அமையட்டுமாக!

நாம் நிறைவேற்றும் ஒவ்வொரு பணியும் சேவையும் அல்லாஹ்வின் பக்கம் நம்மை நெருக்கமாக ஆக்கட்டுமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது அனைத்து முயற்சிகளையும் ஏற்றுக் கொள்வானாக! நிரந்தரமான நன்மையின் பால் நாம் அடியெடுத்து வைப்பதற்கு நமக்கு வழிகாட்டுவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

**இரண்டாவது பிரசங்கம்**

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِيْنَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.